# **பெண்கள் மற்றும் தொழிலாளர்களைப் பணயம் வைக்கின்ற பொய்யான வாக்குறுதிகள்**

*முன்மொழியப்பட்ட இலங்கையின் 2023இற்கான வரவு-செலவுத் திட்டம் தொடர்பான பொருளாதார நீதிக்கான பெண்ணிலைவாத குழுமத்தின் அறிக்கை*

*நவம்பர் 14ம் திகதி 2022 அன்று முன்வைக்கப்பட்ட அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டமானது மிகவும் இரக்கமற்றதாகும். இது பொருளாதார நெருக்கடியின் காரணமாக இலங்கையர்கள் அனுபவிக்கின்ற துயரத்தினை ஒப்புக்கொள்ளத் தவறியுள்ளது.*

*பாதீட்டு உரையில்,'வேகமான பொருளாதார வளர்ச்சி' மற்றும் 'பொருளாதார நவீனமயப்படுத்தல்' போன்றவை முன்னோக்கிய வழிகளாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், இவை தற்போதிருக்கின்ற நெருக்கடி நிலையில் யதார்த்தமற்றவை. இலங்கையர்கள் பலர் பட்டினியினை எதிர்கொள்கின்ற அதேவேளை, இதுதொடர்பான எந்தவொரு குறிப்பும் பாதீட்டு உரையில் இல்லை. நெருக்கடியின் பாதிப்புக்களை மட்டுப்படுத்துவதற்கு மக்களை மையப்படுத்திய, மனிதாபிமான ரீதியிலான முன்மொழிவுகள் இருக்கவேண்டிய இந்நேரத்தில், வரவு-செலவுத் திட்டமானது இந்த நாட்டின் சாதாரண மக்களின் யதார்த்தங்களிலிருந்து பெரிதும் விலகியிருப்பதனையே காட்டிநிற்கின்றது.*

*பாதீட்டு உரையில், 1970இன் பிற்பகுதியிலிருந்து பொருளாதார கொள்கைகளின் தோல்வியினை ஏற்றுக்கொள்ளுகையில் நேரடியாக மக்கள்மீது குற்றஞ்சுமத்துவது தொடர்பில் திகிலடைகின்றோம். கடந்தகாலத்திலும், நிகழ்காலத்திலும் மக்களின் வாழ்வு தொடர்பிலான விழிப்புணர்வின்மையினை வெளிப்படுத்துகின்றவகையில், அரசாங்கத்தின் தேசிய பாதீடு தொடர்பான உரையானது, "நாளுக்கு நாள் நாம் சோம்பேறிகளாகிவிட்டோம். மக்கள் அனைத்தையும் அரசாங்கத்திடமிருந்து பெறுவதற்குப் பழக்கப்பட்டுவிட்டார்கள்," என கடின உழைப்பாழிகளான மக்களை சோம்பேறிகளாகக் காட்சிப்படுத்தி பொருளாதாரத்தில் அவர்களது பங்களிப்பினை முற்றிலும் நிராகரித்துள்ளது. தாராளவாத பொருளாதார மாதிரிக்கு மாறியமையானது, மலிவான உழைப்பாளிகளாக சுரண்டப்படுவதற்கேற்றவகையில் மிகவும் மோசமான பணிநிபந்தனைகளின் கீழ் தொழில்புரிவதற்கு இலங்கையர்களை நிர்ப்பந்தித்துள்ளது என்பதனை நாம் முக்கியமாக நினைவுகூர வேண்டும். இலங்கையின் பொருளாதாரமானது, ஆடைத்தொழிற்சாலைகள், புலம்பெயர் தொழிலாளர் மற்றும் மலையகம் போன்ற நீதியற்ற துறைகளில் தொழிலாளர்களது, குறிப்பாக பெண்களின் தோளில், தங்கியிருந்து வருகின்றது.*

*இன்று இலங்கையிலுள்ள தொழிலாளிகளான ஏழைமக்கள் எதிர்கொள்கின்ற நெருக்கடிநிலைமையினைப் பொறுப்பெடுப்பதில் அரசாங்கமானது மிகமோசமானவிதத்தில் தவறியுள்ளது. வெளிநாட்டு கடன்களை தொழில்புரியும் மக்களுக்கு பயன்படாதவகையிலான திட்டங்களில் முதலிட்டமை உள்ளடங்கலாக ஆளும் வர்க்கத்தினர் கடந்தகாலங்களில் கைக்கொண்ட அரைவேக்காட்டுத்தனமான பொருளாதார கொள்கைகளின் நேரடியான விளைவே இந்த நெருக்கடியாகும்.*

**பெண்களின் உழைப்பு**

*முன்மொழியப்பட்ட பாதீடானது, இந்நெருக்கடி பெண்கள்மீது ஏற்படுத்தியுள்ள சுமையினை ஏற்றுக்கொள்ளத் தவறியுள்ளதுடன், 'இளம் பெண் தொழில்முனைவோர்' எனும் மழுப்புகின்றவிதத்திலான ஒரு பகுதியினரை மட்டுமே குறிப்பிடுகின்றது. ஆயிரக்கணக்கான பெண்கள் அந்நியச்செலாவணியினை நாட்டிற்கு அனுப்புவதற்காக புலம்பெயர் தொழிலாளர்களாகச் செல்கின்றனர். இந்தப் பாதீட்டில் அவர்கள் எங்கே குறிப்பிடப்பட்டுள்ளனர்?*

*பிரச்சனைக்குரிய நுண்கடன்களை அடிப்படையாகக்கொண்ட தொழில்முனைவு மாதிரிகள் முன்னரே உருவாக்கப்பட்டிருக்கின்றன. இக்கடன்களின் விளைவாக ஏழைமக்கள் பரவலாக வீட்டுக்கடன்களில் மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றனர், பலவருடங்களாக அவர்களுக்கான தீர்வுகளை வழங்குவதற்கு இந்நாடு தவறியிருக்கின்றது. நுண்கடன்களினால் பாதிக்கப்பட்டவர்கள், சிலர் தமது உயிரை தாமே மாய்த்துக்கொண்டார்கள், இவர்கள் இக்கடன்களின் பயங்கரத்தினை நீண்டபோராட்டங்கள் மூலமாகவும் தெரியப்படுத்தியிருக்கின்றார்கள். இந்தவருடம் பெண்களுக்கெதிரான வன்முறை அதிகரித்திருப்பதை அங்கீகரிப்பதற்கு இப்பாதீடு தவறியுள்ளது. இந்நெருக்கடியின் சுமையினை பெண்கள் தாங்கிக்கொள்கின்ற*

*அதேவேளை இப்பாதீடானது, பொருளாதார மீட்பு குறித்த சுமையினையும் பெண்களிடம் கைமாற்றுவதற்கு முயற்சிக்கின்றது.*

**வேலைவாய்ப்பின்மை**

*இந்த வருடம் இலங்கையின் பொருளாதாரம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10%இனால் சுருங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. பரந்துபட்ட அளவில் தொழில்வாய்ப்பின்மை அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. வரவிருக்கின்ற தொழில்வாய்ப்பின்மையினை எதிர்கொள்ளதற்கு தொழில்முனைவு மற்றும் வெளிநாட்டுவேலைவாய்ப்பு போன்றவை தீர்வாகமுடியாது. பதிலாக, உள்நாட்டு பொருளாதாரத்தினை ஊக்குவிப்பதற்கு அரசாங்கமானது பிரதான துறைகளான விவசாயம், மீன்பிடி மற்றும் உள்ளூர் தொழிற் துறைகளில் முதலீடுகளை மேற்கொள்வதற்கும், பொதுச்சேவைகளை வலுப்படுத்துவதற்கும் பொறுப்பேற்கவேண்டும். அத்தகைய எவ்வித பொறுப்பேற்றலையும் பாதீட்டில் காணமுடியவில்லை.*

*நம்பிக்கையளிக்காத உலக பொருளாதார நிலைமைகளின் மத்தியில் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதில் தங்கியிருப்பது அபாயகரமானது. மேலும், வர்த்தக வலயத்திட்டங்கள் நிலையற்ற, மலிவான உழைப்பினை குறிப்பாக பெண்களைக் குறிவைத்து விரிவுபடுத்துவதனை சுட்டிக்காட்டுகின்றது. ஏற்றுமதி வர்த்தக வலயங்களிலுள்ள தொழில்வழங்குனர்கள் தொழிலாளர் சட்டங்களைக் கணக்கிலெடுக்காததனை நாம் அனைவரும் அறிந்திருக்கின்றோம். இப்பாதீடானது, தொளிலாளர் உரிமைகள் குறித்து எச்சரிக்கை ஒலியினை ஏற்படுத்துகின்றவகையில் மேலும் தொழிலாளர் திருத்தச்சட்டங்களை முன்மொழிகின்றது.*

**உணவுப்பாதுகாப்பு**

*அண்மையில் வெளிவந்த அறிக்கைகள், மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் உணவுப்பாதுகாப்பற்றவர்களாக இருப்பதாகவும், 70%இற்கும் அதிகமான வீடுகளில் மக்கள் உணவினை உள்ளெடுக்கும் பழக்கங்களில் மாற்றங்களை ஏற்படுத்தியிருப்பதாகவும், அறுவடையானது 33.7%இனால் (50 வருட வீழ்ச்சி). குறைந்திருப்பதாகவும் குறிப்பிடுகின்ற அதேவேளை பாதீட்டில் உணவுப்பாதுகாப்பிற்கு முன்னுரிமையளிக்கப்படவில்லை, தீவிரமான உணவு நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு உணவு உற்பத்தி மற்றும் விநியோகக்கட்டமைப்பினை மீட்பதற்கான வலுவான திட்டமின்றி எம்மால் வெளிவரமுடியாது.*

*சத்துக்குறைபாடு அபாயத்தினை எதிர்நோக்கவுள்ள சிறுவர்களுக்கான ஒதுக்கீடு பாதீட்டில் வரவேற்கத்தக்க விடயமாகும். ஆயினும், சிறுவர்கள் மத்தியில் நிலவுகின்ற தீவிரமான சத்துக்குறைபாட்டினை எதிர்கொள்வதற்கு இந்த நிதி போதுமானதல்ல என நாம் கருதுகின்றோம். பட்டினியினால் ஏற்படக்கூடிய சாவுகளின் உண்மையான அபாயத்தினைக் கருத்தில்கொள்ளும்போது, பாதீடானது, உணவு விநியோகத்திட்டத்தினையும் நாடளாவிய பாடசாலை உணவுத்திட்டத்தினையும் முன்னுரிமைப்படுத்தியிருக்க வேண்டும்.*

*கடந்தகாலங்களில் 'உற்பத்தித்திறனற்ற' மற்றும் 'பயன்படுத்தப்படாத' நிலம் என்கின்ற பதங்கள் ஏழைகளினதும், தொழிலாளர்களதும் இடப்பெயர்விற்கும், வெளியேற்றத்திற்கும் இட்டுச்சென்றுள்ளன என்பது தொடர்பில் நாம் கவலையுறுகின்றோம். 2021இல் உரத்தின் மீது ஏற்படுத்தப்பட்ட தடை மற்றும் விலை உயர்வு போன்றவற்றின் காரணமாக விவசாயிகள் உற்பத்தியினைக் கைவிட்டதனை நாம் அனைவரும் நன்றாக அறிந்திருக்கின்றோம். விவசாயிகளுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும் நிலைபேறான எதிர்காலத்தினைக் கட்டியெழுப்புவதற்கும் முழு நாட்டினதும் உணவுத்தேவைக்காகவும், சிறியதர விவசாயிகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம் விவசாயத்திற்கு புத்துயிரளிப்பது மிகவும் அவசரமானதோர் தேவையாக உள்ளது.*

*மாறாக, பாதீடானது, பல்தேசியக் கம்பனிகள் காணியினை கையகப்படுத்துவதனை முறைசார்விதத்தில் மேற்கொள்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்தியுள்ளதுடன், அதனை நியாயப்படுத்தவும் செய்கின்றது. இது விவசாயிகளை, குறிப்பாக பெண்களை தினக்கூலிகளாக மாற்றுவதன் மூலம் கிராமியப் பொருளாதாரத்தினை மேலும் சீரழிப்பதுடன், இலங்கையின் உணவுத்தேவையினைப் பூர்த்தி செய்வதற்கான நிலைபேறான தீர்வுகளைக் கண்டுபிடிப்பது தொடர்பிலும் எவ்வித முன்னேற்றத்தினையும் ஏற்படுத்தாது.*

*பாதீட்டில் மண்ணெண்ணெயின் விலை அதீதமாக அதிகரிக்கப்பட்டிருப்பதன்மூலம் கடுமையாகப் பாதிக்கப்படுகின்ற மீனவர்களுக்கென எவ்வித நிவாரணமும் வழங்கப்படவில்லை, இது இலங்கையர்கள் புரதத்தேவையினைப் பூர்த்திசெய்வதற்காக தங்கியிருக்கும் பிரதான வளத்தினை இக்கட்டானநிலைக்கு*

*தள்ளிவிடும். தசாப்பதகாலங்களாக அரசினால் ஓரங்கட்டப்பட்ட மலையக மக்கள் மீண்டுமொருமுறை இப்பாதீட்டில் நிராகரிக்கப்பட்டிருக்கின்றார்கள்.*

***சமூக பாதுகாப்பு***

*பாதீடானது, 'சமூகப்பாதுகாப்பு மற்றும் திறந்த பொருளாதார' அணுகுமுறையினை முன்மொழிகின்றது, இது அர்த்தமற்றது. பாதீட்டில் முன்மொழியப்படுகின்ற சமூகப்பாதுகாப்பு விடயங்களைப் பார்க்கும்போது, சமூகப்பாதுகாப்பினை விஸ்தரிப்பதில்லை என்பது தெளிவாகின்றது. மிகவேகமாக அதிகரித்து வருகின்ற வறுமை தொடர்பான பகுப்பாய்வு மற்றும் வாழ்க்கைச்செலவின் மீதான பணவீக்கத்தின் தாக்கத்தினை ஏற்றுக்கொள்ளல் போன்ற எவையும் இல்லை. செப்ரெம்பர் மாத இடைக்கால பாதீட்டில் உறுதியளிக்கப்பட்ட நிவாரணத்தினை இன்னும் பதிவுசெய்யப்பட்ட பயனாளிகள் பெற்றுக்கொள்ளவில்லை என்பதைக் கருத்தில்கொள்ளும்போது, போதுமான அளவிற்கு இல்லாத நிவாரணத்தினைக்கூட சந்தேகத்துடனே பார்க்கவேண்டியுள்ளது.*

*பாதீடானது, நலிவுற்றவர்கள் என அடையாளம் காணப்பட்ட குறிப்பிட்ட குழுக்களுக்கு வழங்கப்பட்ட அற்பமான நிவாரணத்தொகையினை சுட்டிக்காட்டுகின்றது. சனத்தொகையின் அரைவாசிக்கும் மேற்பட்டோர் வறுமைக்குள் வீழும் அபாயம் இருப்பதாக எதிர்வுகூறல்கள் கூறும்போது சமூகப்பாதுகாப்பு தொடர்பான இத்தகைய மட்டுப்படுத்தப்பட்ட கவனமானது தர்க்கரீதியற்றதாகும். இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் நாடளாவிய சமூகப்பாதுகாப்பு தொடர்பில் கருத்திற்கொள்ளத் தவறியமையானது, அரச வரவு செலவுத்திட்டத்தில் பாரியதோர் இடைவெளியாகும்.*

***கல்வி மற்றும் சுகாதாரம்***

*பாடசாலைக்கல்விக்கு பாரிய தடையாக அமைந்த கோவிட்-19 மற்றும் அதன்பின்னரான பொருளாதார நெருக்கடி தொடர்பில் பாதீட்டில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. கற்றலில் ஏற்பட்ட இழப்பினை எதிர்கொள்ளவோ அல்லது இதனால் பாதிக்கப்பட்ட தலைமுறைக்கு உதவக்கூடிய கல்விக்கான திட்டத்தினை முன்மொழியவோ இல்லை.*

*அரசவைத்தியசாலைகளில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளக்கூடிய விடுதிகளை அறிமுகப்படுத்துவதற்கான முன்மொழிவானது மிகவும் கவலைக்குரியது. அத்தியாவசியமான உபகரணங்கள், கட்டுமானங்கள் மற்றும் கிராமப்புற மாவட்டங்களில் பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்கள் குறைபாடு போன்ற வைத்தியசாலைகளில் நிலவும் பாரிய தேவைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இந்த நிலையில், முன்மொழியப்பட்ட கொடுப்பனவுகளுடனான விடுதிகள், மீதமிருக்கும் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களையும் கட்டணம் செலுத்தக்கூடிய மக்களுக்கு ஒதுக்குவதன்மூலம் ஏழைகளை மேலும் ஓரங்கட்டுகின்றது. இலங்கையிலுள்ள சுகாதாரக் கட்டமைப்பினை தனியார்மயப்படுத்துவதற்கான ஆரம்ப படிமுறைகளே இவை என்பதனை நாம் நன்றாக அறிந்திருக்கின்றோம். இதன் மூலமாக தெற்காசியாவிலே செயலூக்கம் உடைய பொது சுகாதார கட்டமைப்பினை கொண்டிருக்கும் ஒரே நாடு என்கின்ற பெருமையினை இல்லாதொழிக்கின்றது.*

*பாதுகாப்புப்படைக்கென ஒதுக்கப்பட்ட நிதியுடன் பிரதான துறைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியினைப் பார்க்கும்போது, அவை அரசாங்கத்தின் முன்னுரிமைகள் எவையென்பதைக் கூறுகின்றன. பாதீட்டில் பாதுகாப்பிற்கென நிதி ரூ 539பில்லியனும், சுகாதாரத்திற்கு ரூ 322 பில்லியனும், கல்விக்கு ரூ 232 பில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளன.*

***வருமானங்கள்***

*அரசாங்கம் தனது வருமானத்தை மறைமுக வரிகள் ஊடாக பெறுவதிலே பெரிதாக தங்கியுள்ளது. எமது (தனி) வருமானங்கள் அதிகரிப்பதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படாத நிலையில் எதிர்வரும் வருடத்திலும் எமது வாழ்க்கை செலவு மேலும் அதிகரிப்பதையே எதிர்பார்க்கலாம். முன்மொழியப்பட்ட வரித்திட்டத்தின் சுமையை சாதாரண மக்களே சுமக்கவேண்டியுள்ள அதே நேரம், பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் பொறுப்பையும் சுமக்க எதிர்ப்பார்க்கப்படுகிறார்கள். சொத்து வரிக்கான கோரிக்கைகள் கேட்கப்படாது போயிள்ளன.*

*பொருளாதார நீதிக்கான பெண்ணிலைவாத குழுமத்தை சேர்ந்த நாம், சாதாரண மக்களின் வாழ்க்கையை மேலும் துன்பத்தில் தள்ளாமல் அரசாங்கத்தின் வருமானத்தை சொத்து வரியூடாக அதிகரிக்கும் மீள்-பகிர்த்தல் நீதிக்கு அழைக்கிறோம்.*

***பொருளாதாரத்தை மீட்கும் திட்டமா?***

*உணவு நெருக்கடியை தடுக்கக்கூடிய உடனடி மனிதாபிமான கரிசனைகளை இந்த பாதீடு உள்ளடக்கவில்லை. மக்களை மையப்படுத்திய பொருளாதார மீட்சித்திட்டம் ஒன்றையும் இது முன்மொழியவில்லை. மாறாக. நிகழ்காலத்தில் இருந்து தொலைதூரத்தில் உள்ள இந்த கொள்கை முன்மொழிவுகள் கடந்த காலங்களில் தோற்கடிக்கப்பட்ட கொள்கைகளை திரும்பக்கொண்டுவரும் முயற்சியாகும். சந்தேகத்திற்கு இடமின்றி இந்த பாதீடு சாதாரண மக்களை மேலும் ஆழமாக பாத்திக்கப்போகின்றது. மக்கள் எழுந்து பொருளாதார நீதியைக்கோரும் தருணம் இது!*

***பொருளாதார நீதிக்கான பெண்ணிலைவாத குழுமம் நாடளாவிய ரீதியில் இருக்கும் பெண்ணிய பொருளியளார்கள், கல்விமான்கள், செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சட்டத்தரணிகள் அடங்கிய குழு. இவர்கள் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்படும் தாம் வேலை செய்யும் சமூகங்களின் வாழ்க்கை நிஜங்களை விளங்கி, ஆராய்ந்து கொள்கை மாற்றங்கள் ஊடாக அவர்களுக்கு குரல் கொடுக்கவும் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் இணைந்துள்ளனர்.***
***உங்கள் கருத்துக்களை feministcollectiveforjustice@gmail.com எனும் மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்.***